## <u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

## <u>OS.No. – 209/2018 C/w OS 210/2018 C/w OS 262/2016</u>

நாள் 12.08.2025

PW1 – P. சுந்தராம்பாள்

க/பெ – லேட். பழனிச்சாமி கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of August 2025.)**

### <u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.22 வரையிலான சான்றாவணங்கள் இந்த வழக்கிற்கு பின்னிட்ட காலத்திற்குரியது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா எண்.3–ல் 7–வது வரியில் 8–ம் பிரதிவாதி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கு 30.01.2025–ம் தேதியில் முடிக்கப்பட்டு விட்டது என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்யாததால் தான் அந்த வழக்கு முடிக்கப்பட்டு விட்டது என்றால் சரியல்ல. அந்த குற்ற வழக்கில் சொல்லப்பட்ட சம்பவமே நடக்காத நிலையில் தான் எங்களால் எந்தவொரு ஆவணமும் காவல் நிலையத்தில் சமர்பிக்கவில்லை என்றும், அதனால் தான் அந்த குற்ற வழக்கு முடிக்கப்பட்டு விட்டது என்றால் சரியல்ல. நாங்கள் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி தான் நடக்காத சம்பவத்திற்கு நடந்ததாக பொய் புகார்

கொடுத்து பொய் வழக்கு போட்டோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள DVD வீடியோவை எனது மகன் தான் தயார் செய்தார் என்றால் சரிதான். அந்த DVD வீடியோ சம்பவம் சம்பந்தமாக தனியாக குற்ற வழக்கு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, பூண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம். அந்த புகாரை 2024–ம் ஆண்டில் கொடுத்தோம். அந்த வீடியோவை எனது மகனின் செல்போனில் பார்த்து தான் நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

2. நான் மற்ற இடத்திற்கு சென்று DVD player மூலம் அந்த DVD வீடியோவை பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது மகனின் செல்போனில் இருந்த வீடியோவை DVD CD ஆக எந்த போட்டோ சென்டரில் கொடுத்து மாற்றப்பட்டது என்ற விபரமும் அதற்குரிய ரசீதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், பின்னிட்டு சாட்சி அதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாக சொல்கிறார். அது சம்பந்தப்பட்ட ஆவணம் குறித்த விபரம் எதுவும் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு படிக்க தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 06.10.2024, 08.10.2024, 09.10.2024, 27.07.2025 ஆகிய தேதிகளில் எந்தவொரு சம்பவமும் நடக்காத நிலையில் சம்பவம் நடந்ததாக சொல்லி பொய்யாக இந்த வழக்கிற்கு பின்னிட்டு வழக்கிற்காக வேண்டி தயார் செய்து தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எங்களுடைய தவறுகளை மறைப்பதற்காக வேண்டியும், வழக்கில் ஏற்பட்டுள்ள இடைவெளியை நிரப்புவதற்காக வேண்டியும் தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படி ஏற்கக்கூடியதல்ல என்று

சொன்னால் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றும், அதனால் என்னுடைய சாட்சியம் நிராகரிக்கக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்குகளை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.08.12 17:04:08 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**